| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| | நகர் மன்ற அவசரக் கூட்டம் | | |
| | கூட்டம் எண்: . நாள்: 24-05-2022 | | |
| | மாங்காடு நகராட்சியின் மே-2022-ம் மாதம் நகர்மன்ற அவசரக் கூட்டம் 24-05-2022 அன்று செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு நகர் மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. | | |
| | முன்னிலை<br>திருமதி- சுமதி முருகன்<br>நகர் மன்ற தலைவர் | | |
| | **பொருள் எண்.1**<br>அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி, பின்வருமாறு 01.04.2022 முதல் சொத்துவரி/ காலிமனைவரியினை பொதுச்சீராய்வு மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க இந்நகர்மன்ற தீர்மான எண்.38, நாள்.11.04.2022–ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. | 42 | |

சொத்து வரி :- குடியிருப்பு கட்டடங்கள் (Residential Building) :

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கான காரணி |
|---|---|
| <= 600 | 1.25 |
| 601–1200 | 1.50 |
| 1201–1800 | 1.75 |
| >1800 | 2.00 |

குடியிருப்பு அல்லாத கட்டடங்கள் (Non-Residential Building) :

| வகைபாடு | உயர்வு செய்வதற்கான காரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2.00 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

| வ. எண். | பொருள் |
|---|---|

| தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|

மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:

1) 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்து வரி உயர்வு செய்யப்பட வேண்டும்
2) 601 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்து வரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்து வரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | குடியிருப்பு | | | |
|---|---|---|---|---|---|
| | | 600 சதுரடி வரை (1.25) | 601 முதல் 1200 சதுரடி வரை (1.50) | 1201 முதல் 1800 சதுரடி வரை (1.75) | 1800 சதுரடிக்கு மேல் (2.00) |
| A | 1.25 | 1.60 | 1.90 | 2.20 | 2.50 |
| B | 0.75 | 0.95 | 1.15 | 1.35 | 1.50 |
| C | 0.50 | 0.63 | 0.75 | 0.90 | 1.00 |

| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | வணிகம் |
|---|---|---|
| | | வரிசீராய்வின் போது வணிக பயன்பாடு கட்டிடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (*2) |
| A | 3.75 | 7.50 |
| B | 2.25 | 4.50 |
| C | 1.50 | 3.00 |

| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | தொழிற்சாலைகள் |
|---|---|---|
| | | வரிசீராய்வின் போது வணிக பயன்பாடு கட்டிடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (*1.75) |
| A | 2.50 | 4.40 |
| B | 1.50 | 2.70 |
| C | 1.00 | 1.75 |

| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரிகள் |
|---|---|---|
| | | வரிசீராய்வின் போது சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (*1.75) |
| A | 2.50 | 4.40 |
| B | 1.50 | 2.70 |
| C | 1.00 | 1.75 |

| வ. எண். | பொருள் |
|---|---|

காலிமனை வரி சீராய்வு:

காலிமனை வரி விதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி விரிதிப்பு செய்யப்பட வேண்டும்.

| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | காலியிடம் வரிசீராய்வின் போது காலிமனை இடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (*2) |
|---|---|---|
| A | 0.20 | 0.40 |
| B | 0.15 | 0.30 |
| C | 0.10 | 0.20 |

மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்ட விவரங்களுக்கு நகர்மன்ற ஒப்புதல் பெறப்பட்டு பொதுச்சீராய்வு வழிகாட்டு நெறிமுறைகளின்படி, இதனை பொது மக்கள் அறியும் வகையில் காஞ்சிபுரம் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறை வாயிலாக 13.04.2022 அன்று தினகரன் தமிழ் நாளிதழ் மற்றும் Times of India ஆங்கில நாளிதழில் செய்தி வெளியிட்டு, அலுவலக விளம்பரப்பலகையிலும் அறிவிப்பு வெளியிடப்பட்டு மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உயர்வு செய்யப்படும் காரணிகளின் மண்டல மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டமைக்கு ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 தினங்களுக்குள் எழுத்து பூர்வமாகவோ நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ மாங்காடு நகராட்சி ஆணையருக்கு சமர்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. மேற்படி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டவாறு, இந்திய கம்யுனிஸ்ட் கட்சியின் (மார்க்சிட்) மாவட்ட செயலாளர், திரு.சி.சங்கர் என்பவரிடமிருந்து சொத்துவரி சீராய்வினை கைவிடவேண்டும் என ஆட்சேபனை தெரிவித்து வரப்பெற்றது. இதை தவிர பொது மக்களிடமிருந்தோ மற்றும் வணிக நிறுவனங்களிடமிருந்தோ எந்தவித ஆட்சேபனையும் வரப்பெறாத நிலையில், மேற்படி ஆட்சேபனை மனுவினை பரிசீலனை செய்யப்பட்டு உரிய காரணங்களுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

| தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
| --- | --- | --- | --- |
| | எனவே 11.04.2022 தேதிய நகர்மன்ற கூட்ட தீர்மானத்தில் அங்கீகரிக்கப்பட்டவாறு 01.04.2022 முதல் சொத்துவரி மற்றும் காலிமனைவரி பொதுசீராய்வு மேற்கொள்ளவும், இதில் நிர்ணயம் செய்யப்பட்ட மண்டல மதிப்பினை உறுதி செய்தும், அதற்கான அறிவிப்பினை மாவட்ட அரசிதழில் வெளியிட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலவலகக் குறிப்பு :-** நகராட்சியில் அதிகரித்துள்ள நிதி தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது நிதிக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் அரசாணை (நிலை) எண்.52, ந.நி(ம) மு.வ (நநி4) துறை நாள்.30.03.2022ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு 01.04.2022 முதல் சொத்துவரி மற்றும் காலிமனை வரியினை பொது சீராய்வு மேற்கொள்ள மேலே நிர்ணயம் செய்யப்பட்ட மண்டல அடிப்படையினை உறுதி செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம். | | ஒப்புதல் அளிக்கப்பட்டது<br><br>M. அமுதி |